O.S.37-2016

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.37/2016

வாதி தரப்பு 1வது சாட்சி பழனிச்சாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பழனிச்சாமி | வயது | : | 62/23 |
| தகப்பனார் பெயர் | : | முனியன் | தாலுகா | : | விராலிமலை |
| கிராமம் | : | காரப்பட்டு | தொழில் | : | விவசாயம் |

நாள்-08.08.2024

வா.சா.1

**6, 14, 15, 16 மற்றும்17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கு விபரங்கள் பற்றி வழக்கறிஞருக்கு நான் சொல்லி தான் தாக்கல் செய்தார்.

2) தாவா சொத்துக்கள் நல்லதம்பி விற்பன்னர் (எ) ராமவிற்பன்னர் என்பவருக்கு சொந்தம் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு சொந்தம் என்று சொல்வதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) நல்லதம்பி விற்பன்னர் (எ) ராமவிற்பன்னர் எந்த ஆண்டு இறந்தார் என்று என் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு விபரம் தெரிவதற்கு முன்பே இறந்துவிட்டார்.

4) நல்லதம்பி விற்பன்னர் (எ) ராமவிற்பன்னர்க்கு எத்தனை மனைவிகள், அவர்களது பெயர் என்ன? அவர்கள் எப்பொழுது இறந்தார்கள் என்ற விபத்தினை என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) 2ம் பிரதிவாதி செல்லக்கண்ணுவிற்கு 81 வயது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி லெட்சுமாயிக்கு 78 வயது என்றால் இருக்கும். அதன்பிறகுதான் 1ம் பிரதிவாதி வீராச்சாமி என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதி அஞ்சலைக்கு 74 வயது என்றால் இருக்கும். மூவரும் எனக்கு அக்கா.

6) எனது வழக்குரையில் தாவா சொத்துக்களை முனியன் விற்பன்னரும், சங்கிலி விற்பன்னரும் 50 வருடங்களுக்கு முன்னர் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வாய்மொழி

பாகப்பிரிவினை எப்போது, எங்கு வைத்து, யார் முன்னிலையில் நடந்தது என்றால் அதுபற்றி தெரியாது. நிலத்தினை அனுபவம் செய்ததுதான் தெரியும்.

7) இவைகள் அனைத்தையும் ஒரு யூகத்தில் சொல்கிறேன் என்றால் இல்லை. விவசாயம் செய்ததை வைத்து சொல்கிறேன்.

8) வாய்மொழி பாகம் என்றால் எந்த காலத்தில், எந்த இடத்தில் வைத்து என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விபரத்தை தெளிவாக எனது வழக்குரையில் சொல்ல வேண்டும் என்றாலும், அவ்வாறு எனது வழக்குரையில் சொல்லாததால் எனது வழக்குரை தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

9) எனது தகப்பனார் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் இறந்து சுமார் 30 ஆண்டுகள் இருக்கும் என்றால் இல்லை, சுமார் 15 வருடங்கள் இருக்கும்.

10) நான் எனது வழக்குரையில் தாவா சொத்திற்கு, முனியன் விற்பன்னர், சங்கிலி விற்பன்னர், வீராச்சாமி, பழனிச்சாமி, அழகம்மாள், பொன்னம்மாள், பால்மணி, முத்து அனைவர் பெயரிலும் பட்டா ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

11) அதில் முத்துகருப்பன், பால்மணி ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முத்துக்கருப்பன், பால்மணி இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றாலும், அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

12) எனது வழக்குரையில் இருளாண்டி விற்பன்னர் மகன் முனியன், ரெங்கம்மாள், குமரன், பாலன் மற்றும் சங்கிலி விற்பன்னர் பெயரில் பட்டாக்கள் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. அவர்கள் அவசியமான தரப்பினர்கள் என்பதால், அவர்களை இந்த வழக்கில் சேர்க்காதது தாவா பிழை என்றாலும் சரியல்ல.

13) நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதிக்கும், 5ம் பிரதிவாதிக்கும் முன்னறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் இல்லை.

14) 80 ஏக்கர் சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். எத்தனை இன சொத்துக்கள் என்றால் சுமார் 110 சர்வே எண்கள் என்று ஞாபகம்.

15) பூர்வீக சொத்துக்கள் ராம விற்பன்னரின் சொத்துக்கள் எத்தனை, சங்கிலி விற்பன்னரின் சொத்துக்கள் எத்தனை, முனியன் விற்பன்னரின் சொத்துக்கள் எத்ததனை என்று எனது வழக்குரையில் தனித்தனியாக சொல்லவில்லை என்றால் ஆமாம்.

16) தாவா சொத்துக்களில் பூர்வீக சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்கள் என்று எனது வழக்குரையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ஞாபகத்திற்கு வரவில்லை.

17) எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ பூர்வீக சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்கள் என்று குறிப்பாக சொல்லாமல் பொதுவாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

18) எனது வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ பூர்வீக சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றாலும், பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அந்த காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

19) எனது வழக்குரையில் எனக்கு என்ன தொழில், என்ன வருமானம் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

20) வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி பெயரில் எந்தெந்த சொத்துக்கள், எந்தெந்த ஆண்டு வாங்கியது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

21) 1981ம் ஆண்டிலேயே 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அப்பொழுது நான் திருமணம் ஆகாமல் இருந்தேன். .ஒன்றாகத்தான் இருந்தோம். 1ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கிய பிறகுதான் என் தகப்பனார் இறந்தார் என்றால் ஆமாம்.

22) 2, 3, 4 பிரதிவாதிகளான எனது சகோதரிகளுக்கு என்ன தொழில், என்ன வருமானம் என்று சொல்லவில்லை என்றால் எங்களோடு இருந்து விவசாய வேலை செய்தும், எருமை மாடுகள் வைத்தும் சம்பாதித்தார்கள். இதை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எனக்கு விபரம் தெரிவதற்கு முன்பே திருமணமாகி அவர்களது கணவர்,

பிள்ளைகளுடன் இருந்தார்கள். அஞ்சலை எங்களோடு இருந்து அவரது அத்தை மகனை காதலித்து திருமணம் செய்து போய்விட்டார்.

23) 2,3 பிரதிவாதிகளின் பேரக்குழந்தைகளுக்கே திருமணம் ஆகிவிட்டது என்றால் ஆமாம். 2,3 பிரதிவாதிகளுக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது.

24) நான் 3ம் பிரதிவாதியின் மகளை திருமணம் செய்துள்ளேன்.

25) 1 மற்றும் 5ம் பிரதிவாதிகளின் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் பல கோடி மதிப்புள்ள சொத்துக்கள் என்றால் ஆமாம். சுமார் 100 கோடி மதிப்பு இருக்கும் என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.